பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 109 நாள் : 01.08.2018

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களில் 2030 வாகனங்களின் பட்டியல் மூன்றாம்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து, போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த வாகனங்கள் காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு, வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 1 முதல் 5 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் இராயபுரம் மண்டலம், கோட்டம்–58, சூளை, அவதான பாப்பையா தெருவில் மலேரியா ஸ்டோர் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி இடத்திலும், மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 6 முதல் 10 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–107, மேயர் சத்திய மூர்த்தி சாலை, கெங்குரெட்டி சுரங்கப்பாதை அருகிலுள்ள மத்திய தார் கலவை நிலைய வளாகத்திலும், தெற்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 11 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் பெருங்குடி மண்டலம், கோட்டம்–188, வேளச்சேரி–தாம்பரம் சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தப்படவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை எனவும் காவல்துறையின் மூலம் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை 7912 வாகனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் வசம் காவல்துறை மூலம் பெறப்பட்டுள்ளன. இந்த 7912 வாகனங்களில், சான்று அளிக்கப்பட்ட 5882 வாகனங்களின் எண்களின் பட்டியலை பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தின் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு 05.06.2018 மற்றும் 14.07.2018 ஆகிய தேதிகளில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இறுதியாக, மீதமுள்ள 2030 வாகனங்களுக்கு காவல்துறையிடமிருந்து ஒப்புதல் சான்று தற்பொழுது பெறப்பட்டுள்ளது. அதனுடைய பட்டியலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளமான www.chennaicorporation.gov.in–ல் வெளியிடப்பட்டுள்ள 2030 வாகனங்களின் விவரங்களைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் உரிமை கோரும் வாகனத்தின் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் அவர்களை 15 நாட்களுக்குள் அணுகுமாறும், மேலும், பருவமழைக்காலங்கள் தொடங்க உள்ளதால் நீண்ட நாட்கள் நிற்கும் இவ்வாகனங்கள் மூலம் மழைநீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் ஏற்படுகிறது என பொதுமக்கள், தன்னார்வலர்கள் மூலம் புகார்கள் வரப்பெற்றுள்ளது. எனவே, இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்கள் வாகனத்தை எடுத்துச் செல்லுமாறும், அவ்வாறு 15 நாட்களுக்கு பின் உரிமம் கோராத வாகனங்களை இ–ஏலம் (E-Tender) விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சியால் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**